## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை - 2013

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டுத் தொகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் நோக்கில் சபையும் அபிவிருத்தி வங்கியொன்றுடன் ஒருங்கிணைந்து கூட்டுத் தனியார் கம்பனியில் ரூபா 1,439,656,910 தொகையான பிடித்துவைத்தல் இலாபத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டின் நியாயப் பெறுமதி அதிகரிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 418,476,859 தொகை கணக்கீடு செய்யப்படுகையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் பின்னோக்கி மீள் வெளியீடாக கணக்கீடு செய்யப்படுவதற்குப்

பதிலாக முன்னைய ஆண்டுச் சீராக்கமாக மீளாய்வாண்டின் திரண்ட இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) பூச்சியத் தேறிய பெறுமதியைக் கொண்டிருந்த சகல மோட்டார் வாகனங்களும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் பெறுமதியிடப்பட்டிருந்தன. இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம், பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டு விகிதம் பயனுள்ள ஆயுட் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக பெறுமானத்தேய்விற்கான 02 ஏற்பாடு அதாவது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மோட்டார் வாகனத்திற்காக 20 சதவீதமும், 10 ஆண்டுகளுக்குக் குறைவான மோட்டார் வாகனத்திற்காக 10 சதவீதமுமாக மீள்பெறுமதியிடலுக்கு முன்னர் நிலவிய பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) சபைக்கு வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டிராததுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அச் சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டிற்குச் சமமான பெறுமதி குறைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடனில் பெறவேண்டிய வட்டிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் தாக்கமளிக்கும் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களின் மூலம் அத்தகைய கணக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைக் குறிப்புகள் இல. 2.18 இன் மூலம் நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தாலும் தொடரப்பட்டிருந்த 06 வழக்குகள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிகழத்தக்க

பொறுப்புகளும் நிகழத்தக்க சொத்துக்களும் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னுரிமைப் பங்குகள் மற்றும் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்படுகையில் பெறுமதி குறைந்து செல்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 122,822,417 தொகையான பெறுமதி 2013 ஆம் ஆண்டின் போதும் ஒதுக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய முதலீடுகளின் காலக்கழிவு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய அனுசரணையாளர் மற்றும் விற்பனைக் கூடங்களின் வருமானம் ரூபா 3,180,000 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் சரியாகக் கணிப்பிடப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது பணிக்கொடைச் செலவினம் ரூபா 302,097 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,324,516 தொகையான முற்பணங்களுக்குரிய சேவைகளும் வழங்கல்களும் முடிவுற்றிருந்த போதிலும் தொடர்ந்தும் அப் பணம் முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவினம் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள் கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்ட முறையே ரூபா 11,079,248 தொகையும் ரூபா 622,595 தொகையுமான

அசாதாரண வரவு மற்றும் செலவு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலையான சொத்து விற்பனையால் பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டம் ரூபா 14,952 தொகை குறைவாகவும் ரூபா 14,952 தொகையான சொத்து விற்பனை அதிகமாகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றுடன் உரித்தற்ற முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்களான ரூபா 418,476,859 தொகை இணைக் கம்பனிப் பெறுமதி அதிகரிப்பான ரூபா 47,862,116 தொகையும் அவ் இணைக் கம்பனியின் திரண்ட இலாப சீராக்கமான ரூபா 466,338,975 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி மாற்றத்திற்குத் தாக்கமளிக்கும் வகையில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) தொலைபேசிச் செலவினமான ரூபா 43,090 தொகையும், உபசாரச் செலவினமான ரூபா 2,020 தொகையும், மருத்துவ உதவிச் செலவினமான ரூபா 9,900 தொகையும், சட்டச் செலவினமான ரூபா 70,000 தொகையுமாக ரூபா 125,010 கூட்டுத்தொகை கட்டிட வாடகைச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கட்டிட வாடகைக் கணக்கு அத் தொகையால் அதிகரித்தும் மேற்குறித்த ஒவ்வொரு கணக்குகள் அதே தொகையால் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஏ) 2013 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக குருநாகல் மாகாண அலுவலகத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய குத்தகை வாடகையான ரூபா 201,600 அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கடந்த ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மீள்பெறுமதியீட்டு இலாபத்தொகையான ரூபா 100,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை 2013 இன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிராமையால் அப் பெறுமதியால்

மீள்பெறுமதியீட்டு இலாபமும் ஆதனங்கள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,878,112 தொகையான போதிலும் பட்டோலைகளின் படி இது ரூபா 4,282,832 ஆகக் காணப்பட்டமையால் வேறுபாடு ரூபா 1,595,280 ஆகக் காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | கணக்கு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | (i) | முதலீடு | 88,410,377 | முதலீட்டுச் சான்றிதழ்கள் |
| | (ii) | சீடபிள்யூஜீ அம்பாந்தோட்டை 2018 தனியார் கம்பனிப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 8,000,000 | அமைச்சரவை அங்கீகாரம், நிதி அமைச்சரின் அங்கீகாரம் |
| (ஆ) | | தீர்க்கப்படாத முற்பணம் | 5,324,516 | முற்பணப் பதிவேடு, காலப்பகுப்பாய்வு |
| (இ) | | ஊவா பறணகம ஏற்றுமதித் தயாரிப்பு கிராமம் | 10,403,683 | மீதிகளின் உறுதிப்படுத்தலும் விபரமான பட்டோலைகளும் |

### 2.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை, அதன் கண்டி பிரதேச அலுவலகத்தை நடாத்துவதற்காக அரச வங்கியொன்றிடமுள்ள ஓர் கட்டிடமொன்றைக் குத்தகையில் பெற்றுக்கொள்வதற்கு 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதி அவ் வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் படி குத்தகை உடன்படிக்கை காலம் 2013 யூலை 31 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்ததுடன் 2014 யூலை 08 ஆம் திகதி வரையிலும் மீள வாடகைக் காலம் நீடிக்கப்படவோ அல்லது புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை வாடகையாக ரூபா 841,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,009,740 தொகை அவ் அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்படாதும் முறையான அங்கீகாரம் இன்றியும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|

(அ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கை அமுலாக்கலுக்கான தேசிய

| | |
|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு | அபிவிருத்தி மன்றத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 21 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**

| | |
|---|---|
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | மாதாந்த கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்த சம்பளத்தின் 40 சதவீதத்திற்கு மேற்படலாகாத போதிலும் சபையின் பதவியணிக்கு மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் கடன் வழங்கப்படுகையில் மாதாந்தக் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்தச் சம்பளத்தின் 50 சதவீதமாகக் கருதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 104(1), 104(3), 104(4) மற்றும் 110 | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விபத்து நேர்ந்த நாள் முதல் 03 மாதங்களுக்குள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட பூரணமான அறிக்கை ஒன்று பரிசோதனைக் குழுவால் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் விபத்துத் தொடர்பான விபரங்களடங்கிய இழப்புப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 165 | வருமானத்திற்கான பணம், காசோலை மற்றும் ஏனைய பெறுவனவுகள் பொறுப்பேற்கப்படுகையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் இன்றி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகளுக்காக காசேட்டில் வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு உத்தியோகத்தர் கருத்திற்கொண்டு ஆய்வுரீதியான விசாரிப்பு இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று ரூபா 17,148,432 தொகையாகக் காணப்பட்டது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 388 | தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் சகல காசோலைகள் தொடர்பான விபரமும் உள்ளடக்கப்பட்டு பேணப்படும் பதிவேடு நிதிப் பிரமாணத்தின் படி முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | காசோலைகள் வழங்கப்பட்ட நாள் அல்லது அது செல்லுபடியாகும் நாள் எனும் இரண்டில் பின்னர் எழும் நாள் முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் காசாக்கப்படாதிருக்குமாயின் உரிய நிறுவனத்திற்குக் கடிதத்தின் மூலம் ஞாபகமூட்டப்பட்டு இதற்கும் பதில் கிடைக்காது போயின் உரிய காசோலையை இரத்துச்செய்ய வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 யூன் 30 ஆம் திகதி வரை ரூபா 1,051,078 தொகையான |

| | | | |
|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்படாத 45 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நிதிப் பிரமாணம் 446(2) | வருமானம் மற்றும் செலவினத்திற்காக வங்கி நடைமுறைக் கணக்கு வெவ்வேறாக பேணப்படுகையில் மீதி சமப்படுத்தப்பட்டு மிகுதிக் காசு மீதியை கணக்கீடு செய்வதற்காக பொழிப்பு பிரதான காசேடு பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (vii) | நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபையின் 28 வாகனங்களுக்கு உரித்தான வாகன சம்பவக் குறிப்பேடு, நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு உரிய மாதம் முடிவுற்று அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (viii) | நிதிப் பிரமாணம் 1647 (உ) | வாகனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | | 2002 நவம்பர் 02 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்காக வேறான ஓர் சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 31,688,112 தொகையான கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அத்தகைய ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | குறித்த காலப்பகுதியில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு ஓர் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | சபைக்கு தேவையான வாகனங்கள் நிதிக் குத்தகைக் கொள்வனவு முறைமையின் கீழ் பெறப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 05 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு 4 வாகனங்கள் பெறப்பட்டு 2013 திசெம்பர் 31 வரை ரூபா 10,051,179 தொகையான குத்தகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையால் பிரதிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,500 தொகையான போக்குவரத்துப் படிப்பணமும், ஏனைய ஊழியர்களுக்கு நாளாந்தம் ரூபா 164 தொகையான எல்லைக்கு உட்பட்டு போக்குவரத்துப் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சுற்றறிக்கைக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்த மொத்த போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 5,004,963 ஆகக் காணப்பட்டது. |

(ஐ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| (i) | 5.2.3 ஆம் பந்தி | பாதீட்டைச் சமர்ப்பிக்கையில் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக பாதீடிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அத் திகதியில் பாதீடிடப்பட்ட ஐந்தொகை மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 8.3.9 ஆம் பந்தி | சபைக்குரித்தான 05 வாகனங்களும் 05 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டின் போது வாகனப் பராமரிப்புச் செலவினங்களும் பதவியணி சம்பளம் மற்றும் படிப்பணமாக முறையே ரூபா 3,204,138 தொகையும் ரூபா 899,195 தொகையுமாக ரூபா 4,103,333 கூட்டுத்தொகை சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 100,514,844 மிகையானதுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 60,305,699 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 160,820,543 தொகையான சாதகமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அவ் அதிகரிப்பு தொடர்பான மொத்த

வருமானப் பெறுவனவு ரூபா 69,380,831 ஆல் அதிகரித்திருந்தமையும் மொத்தச் செலவினம் ரூபா 91,439,712 தொகையினால் குறைவடைந்தமை முக்கிய காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### (அ) ஏற்றுமதி மேம்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| பிரிவு | பௌதீக செயலாற்றல் | | | | நிதிச் செயலாற்றல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | இரத்துச் செய்யப்பட்ட அல்லது கைவிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | போதியளவு நிறைவுபெறாத நிகழ்ச்சித்திட்டம் | பூர்த்தி செய்த நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | செயலாற்றல் சதவீதம் | பாதீட்டு நிதிஏற்பாடு | உள்ளபடியான பயன்பாடு | பயன்பாட்டின் சதவீதம் |
| | | | | | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| தொழில்நுட்ப உற்பத்தி | 43 | 05 | 08 | 30 | 70 | 61.23 | 23.51 | 38 |
| கமத்தொழில், கடற்தொழில் உற்பத்தி | 39 | 04 | 14 | 21 | 54 | 53.78 | 31.86 | 59 |
| ஏற்றுமதிச் சேவை | 20 | 02 | 07 | 11 | 55 | 29.33 | 3.72 | 13 |
| விற்பனை அபிவிருத்தி | 42 | 01 | 07 | 34 | 81 | 64.98 | 40.48 | 62 |
| பிரதேச அபிவிருத்தி | 30 | 02 | 14 | 14 | 47 | 71.06 | 28.46 | 40 |
| ஏனைய ஏற்றுமதி சேவைகள் | 27 | - | 04 | 23 | 85 | 29.28 | 10.85 | 37 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விசேட செயற்திட்டம் | 11 | 04 | 06 | 01 | 9 | 79.86 | 3.80 | 4.8 |
| ஏனையவை | 02 | - | 02 | - | 0 | 115 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 0 |
| மொத்தம் | **214** | **18** | **62** | **134** | **62** | **505.02** | **142.68** | **28** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்படுத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை 214 ஆகக் காணப்பட்டதுடன் இவற்றில் 134 மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இதன் படி பௌதீகச் செயற்பாட்டின் செயல்முன்னேற்றம் 62 சதவீதமாகக் காணப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 505.02 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 142.68 மில்லியன் தொகையான அதாவது 28 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் படி, இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தாமைக்கு தாக்கமளித்த காரணங்கள் இனங்காணப்பட்டிராததுடன் சில நிசழ்ச்சித்திட்டங்களுக்கு போதிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படாமைக்குத் தாக்கமளித்த காரணங்களை இனங்கண்டிராமையால் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் மீள செயற்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சி**

ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008 - 2013 இற்கும் இடையேயான காலப்பகுதியின் போது 04 வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சிக்காக ரூபா 65.38 மில்லியன் செலவிடப்பட்டு 82

ஏற்றுமதியாளர்கள் அதில் பங்குபெறச் செய்திருந்த போதும், ஏற்றுமதி மேம்பாட்டுக்கு அதில் 25 பேர் மாத்திரமே தமது பங்களிப்பைச் செய்யக்கூடியதாக இருந்தனர். இதற்கமைய, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் விதத்தில் வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சியில் ஏற்றுமதியாளர்களைப் பங்குபெறச் செய்வது ஆக்கபூர்வமாக நடைபெறவில்லை.

**(இ) பாடநெறி செயல்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 – 2011 காலப்பகுதியின் போது சர்வதேச வியாபாரச் செயற்பாட்டுப் பிரிவு தொடர்பாக பாடநெறியைப் பின்பற்றும் அளவு முறை குறைவாகக் காணப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அந்த அளவு அதிகரித்திருந்தது. எவ்வாறெனினும், 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 32 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 32 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டின் போது பாடநெறிகள் நடாத்தப்பட்ட 04 தவணைகளிலானதுடன் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு பாடநெறி வரை குறைவடைந்திருந்தது.

(ii) புடவைத் துறையில் சேவையில் ஈடுபடுத்திய பதவியணிக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்காகப் பெறப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் ரூபா 207,500 ஆகக் காணப்பட்ட போதிலும் இதற்காக ரூபா 1.04 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 156.6 மில்லியன் செலவில் நடாத்தப்பட்ட இலங்கை எக்ஸ்போ சர்வதேச வியாபார கண்காட்சியின் இலக்கும் நோக்கும் எய்தப்படுவதற்கு இயலுமை உள்ளதா என முன்

சந்தை அவதானிப்புகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிராததுடன் கண்காட்சி நடாத்தப்பட்டதை அடுத்து கண்காட்சி நடாத்தப்படும் நோக்கையும் நோக்கையும் அடைவதற்கு முடிந்ததா என்பது குறித்து மதிப்பீடோ அல்லது மீளாய்வோ 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாறை கமத் தொழில் ஏற்றுமதி வலயத்திற்கு ரூபா 09 மில்லியன் தொகையான 1.2 மில்லியன் அன்னாசி மொரையன் வழங்கப்படுவதற்கு 2009 நவம்பர் 18 ஆம் திகதி வழங்குனருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி, 50 சதவீத முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையில் 86,250 அன்னாசி மொரையன்கள் மாத்திரம் வழங்கப்பட்டமையால் செயற்திட்ட நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் உரிய செயற்திட்டத்தின் நோக்கம் எய்தப்பட்டிராததுடன் முற்பணத் தொகையில் ரூபா 3,853,350 தொகை 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இதன் தற்போதைய நிலை தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன் வழங்கப்பட்டிருந்த 166 ஏற்றுமதிக் கம்பனிகளில் 23 கம்பனிகளுக்கு எதிராக மாத்திரம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை அடுத்து ரூபா 6,996,307 தொகையான நிலுவைக் கடன் மீதிகள் 2006 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது ரூபா 2,801,711 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டின் பின்னர் சட்ட நடவடிக்கைகள் மூலம் கடன் அறவிடப்படுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் கடன் அறவிடப்பட்டு வரும் 23 ஏற்றுமதிக் கம்பனிகளில் 16 கம்பனிகள் கடன் செலுத்தத் தவறியிருந்தன. எஞ்சிய கம்பனிகளில் கடனை மீளச்செலுத்தியிராத 130 ஏற்றுமதிக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,966,208 தொகையான கடனை அறவிடுவதற்காக 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலகக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதை நோக்காகக் கொண்டு சபை, அபிவிருத்தி வங்கி ஒன்றுடன் இணைந்து தனியார் கம்பனி ஒன்றை 1993 நவம்பர் 18 ஆம் திகதி கூட்டமைத்திருந்தது. சபையால் உரிய கம்பனியின் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 161,088,760 தொகையானதுடன் இது அக் கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தில் 41.39 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், 1996 – 2006 வரையான காலப்பகுதியின் போது பங்கிலாபம் செலுத்தப்படுவதற்கு போதிய இலாபம் உரிய கம்பனியால் உழைக்கப்பட்டிருந்த போதிலும் முதலீட்டிற்கான நலன்கள் சபைக்குக் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 30 கம்பனியின் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 105,058,084 தொகையான முதலீட்டிற்காக 1997 – 2013 காலப்பகுதிக்கும் 31 கம்பனிகளில் சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 43,494,334 தொகையான முதலீட்டிற்காக 2001 – 2013 காலப்பகுதிக்குரிய பங்கிலாபம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இந்தியாவின் சென்னை நகரின் 2004 – 2009 ஆம் காலப்பகுதியின் போது சபையால் நடாத்தப்பட்டுவந்த இலங்கை வியாபார நிலையங்கள் 05 இலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகையும் மின்சாரக் கட்டணமான ரூபா 7,049,858 தொகையும் 2014 யூன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) ஏற்றுமதி கம்பனிகளில் நிதி சக்தியை வலுப்படுத்தி ஏற்றுமதி மேம்பாட்டின் மூலம் உயர் ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 1983 – 1999 காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 331 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு ரூபா 46,413,543 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. இதில் 166 கம்பனிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 59,659,978 தொகையான கடன் தொகையில் ரூபா 46,486,856 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் காணப்படும் சபையின் செய்பாடுகளுக்கு மாறாகவும் பீஈடீ 12 ஆம் 2003 யூன் 02 ஆம் திகதிய நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அமைச்சரின் முன் அங்கீரம் பெறப்படாது 2018 பொது நலவாய விளையாட்டு அனுசரணையைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், விளையாட்டு நடவடிக்கைகள் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஒரு தனியார் கம்பனியில் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 8 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பொது நலவாய மன்ற விளையாட்டு விழாவில் அனுசரணை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளாமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இக் கம்பனி நடவடிக்கைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) பயிற்சி நடவடிக்கைகளுக்காக சபையில் இடவசதிகள் இருக்கையில், இதனைக் கருத்திற்கொள்ளாது 45 விண்ணப்பதாரிகளுக்கு அண்மித்த எண்ணிக்கையானோர் கலந்துகொண்ட ஒரு பாடநெறி வெளி நிறுவனத்தில் நடாத்தப்படுவதற்காக 2011 – 2013 காலப்பகுதியின் போது ரூபா 602,274 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினரின் வகைப்படுத்தல் | அங்கீரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| முன்றாம் | 65 | 54 | 11 |
| இரண்டாம் | 128 | 85 | 43 |
| முதலாம் | 75 | 61 | 14 |
| ஒப்பந்த | - | 13 | - |
| மொத்தம் | 268 | 213 | 68 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கைத்தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அமைச்சுச் செயலாளருக்கு விடுவிக்கப்பட்ட 2010 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/30/4/200/2 ஆம் இலக்க கடிதத்தின் 11 ஆம் பந்தியின் படி பதவி வெற்றிடம் நிரப்பப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 6.1.5 ஆம் பிரிவின் பிரகாரம் உதவிப் பணிப்பாளர் (பொது), உதவிப் பணிப்பாளர் (மனித வள முகாமை), உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி) எனும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, உரிய பதவிக்கு கல்வித் தகைமைகளும் சேவை அனுபவமும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத் தகமைகளைக் கொண்டிராத ஓர் உத்தியேதாகத்தர்

உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள்) பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி முறையான அங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் 13 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 5,420,465 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 07 மற்றும் 09 ஆம் பிரிவின் படி, உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமும் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நலிவுற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பாகவும் சபையின் கவனத்தைக் கோரி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட எனினும், போதிய கவனத்தைச் செலுத்தியிராத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறாகும்.

| 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
|---|---|
| 2.2.6 போதிய அதிகாரப்பொறுப்பில் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாதாந்தப் படிப்பணம், எரிபொருள் படிப்பணம் மற்றும் தொலைபேசி கட்டணமாக ரூபா 1,557,337 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை (இ) | ஊவபரணகம பசுமை இல்லம் செயற்திட்டத்தின் கீழ் உடன்படிக்கையிடப்பட்ட நிபந்தனையின் படி காய்கறிகளைப் பயிரிடுவதற்காக 100 பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 5 மில்லியன் கடனை விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்து பொதுத் திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்யும் பொறுப்பு சபைக்குக் வழங்கப்பட்ட போதும், அப் பொறுப்பையும் சபை நிறைவேற்றியிருக்கவில்லை. |
| 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள் | அம்பாந்தோட்டை படஅத கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டிருந்தமையால் முதலீடு செய்யப்பட்ட தொகையை சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) கணக்கீடு

(இ) முதலீடு

(ஈ) கடனை மீள அறவிடுதல்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) வியாபாரக் கண்காட்சி